145

11 OCT 1918

மாதர் போதினி

No. 250 அக்டோபர் 1918 No. 10

SOUL-WINNING

ஆத்தும ஆதாயம்

சித்தியுள்ள ஆத்தும ஆதாயவேலையிலே இரண்டு பாகமுண்டு.

1. பாவிகளுக்காக தேவனிடம் போவது.
2. தேவனுக்காகப் பாவிகளிடம் போவது.

ஜெபம்மாத்திரம் போதாது. விசுவாசமுள்ள மத்தியஸ்த ஜெபம் அதற்கேற்ற ஜீவியத்தோடும், தனித்தாள் வேலையோடும், இணைக்கப் படவேண்டும். இம்மூன்றும் ஒருமித்தே நடக்கவேண்டும். ஆத்துமாக்களை இரட்சிக்கும் விஷயத்திலே, நாம் இயேசுவின் வேலையைச் செய்வதற்கும், இயேசு நமது மூலமாய் வேலை செய்வதற்கும் பெரிய வித்தியாசம் உண்டென்பதைக் கவனிக்கவேண்டும், நாம் அனுகூலம் அடையவேண்டுமானால், இயேசுவின் ஒழுங்கு, இயேசுவின் வகை, இயேசுவின் சமயத்தைக் கவனித்து வேலை செய்யவேண்டும். அவருக்கு நாம் பூரணவாய் இடங்கொடுப்போமானால், பரிசுத்த ஆவியானவர் நம்மை வல்லமையால் நிரப்பி, வழி நடத்தி, ஆத்துமாக்களை இரட்சிப்பதில் ஆத்திரமுள்ளவர்களாக்குவார்.

ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு வாய்ப்பான சமயங்களைக் கண்டு உடனே உபயோகிப்பவன்தான் அநேகரை இயேசுவினிடம் நெருங்கிய சம்பந்தத்தில் கொண்டுவருவான். இயேசுவின் அன்பினாலே நிரப்பப்பட்டிருக்கிறவன் எங்கும் வாய்ப்பான சமயங்களைக் கண்டுபிடிப்பான். போர்ட்ஸ்மத் பட்டணத்திலிருந்து ஒரு கப்பல் உத்தியோகஸ்தர் லண்டன் பட்டணத்திலுள்ள ஒரு பொருட்காட்சி சாலைக்குப் போனார். அவருக்கு அது அதிகப்பிரீதியாக இருந்தது. ஒரு ஆசனத்திலே உட்கார்ந்து சூழ உள்ள காட்சிகளைப் பார்த்தார். ஒரு துரைசானியும் இளைப்பாறவும் கின்னர வாத்தியத்தின் இங்கித

மான பாடலைக் கேட்கவும் பக்கத்திலே உட்கார்ந்தார்கள். உடனே அவர் ஜீவியத்தை ஆட்கொண்டுவந்த வாஞ்சை தலைகாட்டினது. 'என் இரட்சகரை இந்த அம்மாள் அறிவார்களோ? ஆண்டவரே, என் மூலமாய் உம்மை இவர்களுக்கு வெளிப்படுத்தும்' என்று மனதிலே சொல்லிக்கொண்டு அந்தப் பாட்டையே முகவுரையாக வைத்துச் சம்பாஷிக்கத் துவங்கினார். அதின் பலனென்ன? அந்த அழகான காட்சிகளின் மத்தியிலே, ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்த்து நிற்க, அவ்விருவரும் முழங்காலில் நின்று ஜெபித்து, அந்த அம்மாள் தன் இருதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தாள். இவ்வளவு ஆத்திரமில்லாத ஒருவர் இந்தச்சமயத்தை இழந்தேபோயிருப்பார்.

ஒரு துரைசானியின் வீட்டிலுள்ள ஒரு கடியாரத்துக்கு எட்டு நாளைக்கு ஒருதரம் சாவிகொடுக்க, ஒரு கடியாரக்காரன் வருவான். அந்த துரைசானி 'கர்த்தாவே, இந்த மனிதன் என் கடியாரத்தைச் சரிப்படுத்துவதுபோல நான் அவன் ஆத்துமாவைச் சரிப்படுத்த என்னை உபயோகியும்' என்று ஜெபித்துவந்தார்கள். அவன் ஒருத்துவ மார்க்கத்தாரைச் சேர்ந்தவன். தன் கொள்கைதான் உண்மை, மற்றதெல்லாம் தப்பிதம் என்ற பிடிவாதக்காரன். அவனோடு மார்க்க சம்பாஷணைசெய்ய அநேகர் துணியார்கள். ஆனால் இந்த அம்மாள் நாள்தோறும் அவனுக்காக ஜெபித்து, எட்டாம் நாள் அவன் வந்து கடியாரத்தைத் துடைத்து சாவிகொடுக்கும்போது, அவனோடு பேசுவார்கள். ஜெபமும் வேலையுமாக பதினைந்துமாதம் நடந்ததற்கப்பால் அந்த ஆத்துமாவை இயேசுவுக்காக ஆதாயப்படுத்தினார்கள்!

பாக்ஸ்றர் என்பவரைப்பற்றி பிஷப் றைல் சொல்லுகிறதாவது: அவர் ஹிடர் மினிஸ்றர் என்னும் இடத்திற்கு முதலாவது வந்தபோது ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு குடும்பம்மாத்திரம் தேவனை வணங்குகிறவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர் அந்த ஊரைவிட்டுப் போகும்போதோ ஊடே ஊடேமாத்திரம் தேவனை வணங்காத ஜனங்கள் இருந்தார்கள். அப்படிப்பட்ட அனுகூலம் பாக்ஸ்றருக்கு இலேசாய்க் கிடைத்ததா? கண்ணீரோடும், பலத்த சத்தத்தோடும், திட்டமான விசுவாசமுள்ள விண்ணப்பம்செய்து, திட்டமான தனித்தாள் வேலைசெய்ததின் பலனாகவே வந்தது. அப்படியே பலனுள்ள ஆத்தும ஆதாயம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் இந்தக் கிரயத்தைச் செலுத்த ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்தவனின் வேலைக்கு ஓய்வுநேரம் இல்லை என்றும், பென்ஷன் கிடையாதென்றும் அநேகர் உணருகிறதில்லை. உலகத்தில் கிறிஸ்தவனுடைய ஒரே முக்கியவேலை என்னவென்றால், தேவனை

மகிமைப்படுத்துவதும் மோட்சத்துக்கு ஆள் கட்டுவதுமே. அதற்குக் காலம் இப்பொழுதே. இடம் எங்குந்தான். ஜனங்கள் ஓயாது மடிந்துகொண்டிருக்கிறார்கள். ரஜாநாட்களிலே தேவனுக்காக எவ்வளவோ அதிசயமான காரியங்களைச் சிலர் செய்திருக்கிறார்கள். இரண்டு சிநேகிதர் ஒரு கிராமத்திலே கோடைகால விடுமுறையைக் கழிக்கப்போனார்கள். இரண்டு கிராமங்களைப்பற்றிய கவலையை தேவன் அவர்கள் இருதயங்களில் உண்டாக்கினர். சரீர இளைப்பாறுதலடையும்போதே, இந்த இடங்களுக்காக அதிகமாய் ஜெபித்து வந்தார்கள். தங்கள் வேலைக்குத் திரும்பின பின்னும் ஜெபத்தை விடவில்லை. தாங்கள் செய்யக்கூடாத அந்த வேலையைத் தேவன் யாரைக்கொண்டாவது செய்யும்படி கேட்டார்கள். அவர்கள் ஜெபிக்கத்தொடங்கி ஐந்து மாதம் ஆனதிற்குள் அந்த இரண்டு கிராமங்களிலும் வேலை நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; அப்புறம் அவர்கள் ஜெபநேரத்தை இரட்டிப்பாக்கி, பலனுக்காக விசுவாசத்தோடு காத்துக்கொண்டிருந்தார்கள். அக்கிராமங்களில் நூறுபேர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்.

'கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.' இந்தியாவிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்கு இருதயத்திலே தமது மாணக்கரைப்பற்றிய கவலை உண்டானது. தமது உடன் உபாத்திமாரில் மூன்றுபேரை அழைத்து 'வாருங்கள், நாம் நமது மாணக்கருக்காக ஜெபிப்போம்' என்றார். புதன்கிழமை சாயரட்சைதோறும், பையன்கள் வகுப்புவிட்டு விளையாடப்போனபின், தேவன் அவர்கள்மேல் பரிசுத்தாவியை ஊற்றும்படி ஜெபித்தார்கள்.

ஒவ்வொருவராக அந்த இளைஞர் தங்கள் ஆத்துமாக்களின் நிலைமையைப்பற்றி விசாரப்பட்டு குணப்பட்டார்கள். குணப்பட்ட பையன்கள் தங்கள் தோழர்களுக்காக ஜெபிக்கத் துவங்கினார்கள். வரவர அந்த ஜெபக்கூட்டம் பெரிதாகி, இன்னும் குணப்படாத இருநூறு பையன்களுக்காக ஜெபம் செய்யப்பட்டது. விசுவாசமுள்ள இந்த ஜெபங்களின் பலனாக இன்னும் அநேகர் இயேசுவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

ஆத்தும ஆதாய வாஞ்சை மெய்யாகவே நம்மை ஆட்கொள்ளுமானால் நம்முடைய அன்றாடக ஜீவியத்தில் அதற்கேற்ற எத்தனையோ ஏராளமான சமயங்கள் வாய்க்கிறதென்பதைப்பார்த்து ஆச்சரியப்படுவோம்.

ஒரு துரைசானி தன் சிநேகிதியைப் பார்த்து 'நாம் நமது சிநேகிதரை விருந்துக்கு அழைக்கும்போது அவர்களைச் சுக்தோஷப்

படுத்தும்படி நமது வேலைக்காரர், அயலகத்தார், நாம் பாட்டுக்கச்சேரிகளில் புதிதாய்க்கேட்ட பாட்டு, வாசித்த புஸ்தகங்கள் முதலியவைகளைப் பற்றியே பேசி நேரத்தை வீணாய்க் கழிக்கிறோம். இது எனக்குத் திருப்தியாயில்லை. நாம் ஏன் நாளைக்கு விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்காக ஜெபித்து, பக்திவிருத்தியை உண்டாக்கும் சம்பாஷணை செய்யக்கூடாது' என்றார்கள்.

அவர்கள் சிநேகிதி 'நல்லது, நான் விருந்துமேசையின் ஒரு கடைசியில் இருப்பேன். நீ இன்னொரு கடைசியில் இரு. எல்லாருக்குள்ளும் நம்முடைய செல்வாக்கைச் செலுத்தப் பார்க்கலாம்' என்றார்கள். அன்று இரவு அழகிய பட்டாடைகள் தரித்தவர்கள் உட்கார, வாசமுள்ள மலர்கள் நற்கந்தம் வீச, ருசிகரமான பலகாரங்களின் மணமும் அடிக்க, அவர்களை அறியாமலே அளவிடக்கூடாத கிருபையின் பிரசன்னத்தை அவர்கள் உணர்ந்தார்கள். தேவன் கூட இருக்கிறார் என்று உணர்ந்ததால், அவரைப்பற்றிப் பேசுவதும் ஏற்றதாயும் இயல்பாயும் இருந்தது. கடைசியில் ஒரு விருந்தாளி 'இப்படிப்பட்ட சம்பாஷணை கிடைப்பது அபூர்வமாயிருப்பதால் இன்றைக்கு எப்படி நேரம்போனதென்றே தெரியவில்லை. நம்மை அறியாமலே இவ்வித சம்பாஷணையின்மேல் நமக்குப் பெருந்தாகம் இருக்கிறது' என்றார்கள்.

எல்லாரும் உத்தரவுபெற்றுக்கொண்டு போனபின் வீட்டுக்கார அம்மாள் சிநேகிதியைப் பார்த்து 'என்ன, நாம் யோசித்த காரியம் கைகூடினதா?' என்றார்கள். அதற்கு அவர்கள், 'எனக்குப் பக்கத்திலிருந்த அம்மாளோடு ஜெபத்தைப்பற்றிப் பேசினேன். அடுத்த பக்கத்திலிருந்த அம்மாளும் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்து, உங்களோடு பேச நாளைக்கு வரலாமா என்று கேட்டார்கள். தன் ஆத்துமாவைப்பற்றி இவர்கள் விசாரப்பட்டும் இதுவரை அதை ஒருவரிடமும் சொல்லத் தைரியமில்லையாம். நம்முடைய விருந்துகளின் பலனை இனிமேலாகத்தான் காண்போம்' என்றார்கள்.

ஒரு வேதபாட வகுப்பை நடத்தும் உபாத்திச்சியம்மாள் தன் மாணுக்கிகளைப்பற்றி யோசித்துக்கொண்டே யிருந்தார்கள். ஒரு வாலிபஸ்திரீ நிர்விசாரியாகவும், உலகசிந்தையும் உல்லாசமும் நிறைந்தவளாகவுமிருந்தாள். அவளை எப்படி வசப்படுத்தலாம் என்று யோசித்து, தன் வீட்டுக்குத் தன்னோடுகூட தேயிலைப்பானம் சாப்பிட அழைத்தார்கள். அப்படியே அந்தப் பெண் வந்தாள். அந்தப் பெண் வீணாக தன் ஜீவியத்தைக் கழிக்கிறதையும், எவ்வளவோ பிரயோஜனமாய் அவள் பிழைக்கலாம் என்பதையும் வெகு தெளிவாயும் நேராயும் எடுத்துக் காட்டினார்கள். அந்தப் பெண் 'நாடகத்திற்குப்

போவது முதலான அநேக சந்தோஷங்களை நான் விட்டுவிடவேண்டியதாயிருக்குமே' என்று ஆக்ஷேபித்தாள்.

உபாத்திச்சியம்மாள் சொன்னது, 'அது உண்மையே. நீ உடனே எது வேண்டுமென்று தெரிந்துகொள்ளவேண்டும். இருபது நிமிஷம் இதைப்பற்றி யோசிக்க உன்னைத் தனிமையாய் விட்டுப்போகிறேன். அதற்குள் தீர்மானம்செய்து சொல்' என்று ஒரு வேலையைச் செய்யப்போனார்கள். அவர்கள் மறுபடியும் தன் மாணுக்கியிடம் வந்தபோது அந்தப் பெண் எட்டிப்பார்த்து 'நான் இயேசுவைமாத்திரம் பின்பற்றுவேன்' என்றாள்.

நாலு வாரத்திற்குப் பிற்பாடு அவள் எஜமான் 'உன்னிலே ஏதோ ஒரு மாறுதல் உண்டாயிருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன். ஒரு மாதத்திற்கு முன்னே உன் மேட்டிமையான நடக்கையினிமித்தம் உன்னை வேலையைவிட்டுத் தள்ளிப்போட யோசனையாயிருந்தேன். ஆனால், உன் அதிர்ஷ்டம், அது உன்னிலிருந்து முற்றிலும் நீங்கிவிட்டது' என்றார்.

'ஓ, அதின் காரணத்தை நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். சரியாய் ஒரு மாதத்திற்கு முன்தான் இயேசு என் ஜீவியத்தை ஆண்டு நடத்தும்படி என்னை அவருக்கு ஒப்புக்கொடுத்தேன்' என்றாள். அவர் 'நான் ஒரு நாஸ்திகன். அந்தக் காரியத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது' என்றார். அவருக்கு விளங்காத இரகசியம் மற்றவர்களுக்கு விளங்கினது. அவளிலிருந்து ஆசீர்வாதமாகிய நதி வழிந்தோடினது. அந்த ஷாப்பில் வேலைசெய்த பெண்களுக்குள்ளே அவளும், அவளால் குணப்பட்ட சிலரும் செய்த திட்டமான தனித்தாள் வேலையினாலே நூறு பெண்கள் குணப்பட்டார்கள். இப்போது அவள் புறதேச மிஷனெரியாய் இருக்கிறாள்.

அநேகர் தங்கள் ஜீவியத்தில் இழந்துவிட்ட சமயங்கள் ஏராளம். லண்டன் பட்டணத்தில் ஒரு சீமாட்டி மரணத்தருவாயிலிருந்தார்கள். போதகருக்கு ஆள் அனுப்பி தனக்கு சுகம் வரும்படி ஜெபிக்கக் கேட்டார்கள். அவர், 'நீங்கள் கிறிஸ்தவர்களாச்சே. கிறிஸ்தவர்களுக்கு சாவு ஆதாயந்தானே' என்றார். அந்த அம்மாள் 'ஆம், நாற்பது வருஷமாய் நான் கிறிஸ்தவளாய் இருந்திருக்கிறேன். மரணத்திற்குச் சமீபிக்கவுந்தான், நான் ஒரு ஆத்துமாவையும் ஆதாயம் செய்யவில்லையே என்று கண்டு பிரலாபிக்கிறேன்' என்றார்கள். சிலநாள் கழித்து போதகர் அங்கே மறுபடியும் போனார். கதவுகள், இலைகள் எல்லாம் துக்கத்திற்கு அடையாளமாய் அடைக்கப்பட்டிருந்தன. அந்த அம்மாள் கடைசியாய்ச் சொல்லி அங்கலாய்த்த வார்த்தைகள் என்னவென்றால் 'ஓ, இன்னும் ஒரு சமயம் கிடையாதா? இன்னும் ஒரு சமயம் கிடையாதா?' என்பதே.

தனித்தாள் வேலை

(அந்தந்த வகுப்பாரே அந்தந்த வகுப்பாருக்குள் வேலைசெய்தல்வேண்டும்.)

'உமக்குச் சொல்லவேண்டிய ஒரு வார்த்தை உண்டு.' 2 இரா. 9:5.
'உங்களுக்காக எப்போதும் போராடுகிறான்.' கொலோ. 4:12.
'தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால்.' 1 யோவா. 5:16.

'நல்ல மேய்ப்பரே, காணாமற்போய் பசியினாலும் மனநோவினாலும் கதறிக்கொண்டிருக்கும் ஆடுகளைத் தேடிப் பத்திரமாய்த் தொழுவத்திற்குக் கொண்டுவந்தோம்' என்று நாம் நமது ஜீவியத்தின் முடிவிலே சொல்லக்கூடுமானால் எவ்வளவு இன்பமாயிருக்கும்.

தனித்தாள் வேலை விஷயமாய் நாம் கவனிக்கவேண்டிய ஒரு காரியம் என்னவெனில், அந்தந்த வகுப்பாரே அந்தந்த வகுப்பாருக்குள் வேலை நடப்பிக்கவேண்டும் என்பதேயாம்.

உயர்குலத்தைச்சேர்ந்த ஒரு ஸ்திரீ கூலியாட்களுக்குள் செய்யும் வேலையைவிட தன் கூட்டத்தாருக்குள்ளே அதிக சித்திபெறலாம். கூலிக்காரிக்குத்தான் தன் உடன் கூலியாட்களின் கஷ்டம் இன்னதென்று தெரியும். அவர்களோடு புழங்கி அவர்களுக்கு அனுதாபங் காட்டக்கூடும். அப்படியே குணப்பட்ட ஒரு வியாபாரி மற்ற வியாபாரிகளுக்குள் நல்லவேலை செய்யக்கூடும். ஒரு மாணாக்கன் தான் நம்பி நேசிக்கும் தோழனுக்குச் செவிகொடுப்பதுபோல் வேறொருவருக்கும் செவிகொடான்.

ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரைக் கவனிக்கவே கூடாது என்று நான் சொல்லாமல், அவரவர் தங்களுக்கினமான வகுப்பாரைப் பிரதானமாய்த் தேடவேண்டும் என்பதையே வற்புறுத்த விரும்புகிறேன்.

'முதல் காரியங்களுக்கு முதல் இடம்' என்பது வாஸ்தவமானால், கூலிவேலை செய்கிறவர்கள் கூலிவேலை செய்கிறவர்களை, ஆஸ்பத்திரியில் இருக்கிறவர்கள் ஆஸ்பத்திரியில் இருக்கிறவர்களை, பள்ளிக்கூடங்களில் இருக்கிறவர்கள் பள்ளிக்கூடங்களில் இருக்கிறவர்களை, ரெயிலில் வேலைசெய்கிறவர்கள் ரெயில் வேலைக்காரரை, தாய்மார் பிள்ளைகளை முதலாவது ஆதாயப்படுத்தத் தேடவேண்டும் என்பதும் வாஸ்தவமே.

கப்பலாட்கள், போர்ச்சேவகர்

இவர்களுக்குள் சுவிசேஷ வேலை மெத்தக் குறைவு. சிலவேளை அநேக வாரங்களாகத் தங்கள் தோழரைத்தவிர வேறொருவரையும் இவர்கள் பார்க்க முடியாது. சீனாவில் பாக்ஸர் கலகம் நடந்தபோது இங்கிலாந்திலிருந்து ஒரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் 600 பேரை ஏற்றிக்கொண்டுபோனது. ஆறுமாதமாகக் கப்பல் ஒரு துறைமுகத்தி

லும் தங்கவில்லை. கப்பலாட்களுக்கு ஆவிக்குரிய உதவி யாதொன்றும் கிடையாது. ஆனால் கர்த்தரை அறிந்த ஒரு மனிதன் அந்தக் கப்பலில் இருந்தான். அவர்களில் அநேகருக்காகப் பேர்போராக ஜெபித்தான். கிறிஸ்துவின் சாயலான தன் ஜீவியத்தால், தன்னுடைய தேவன் ஒரு மனிதனுக்கு என்ன செய்யக்கூடுமென்று காண்பித்தான். தன் இரட்சகருக்காக முப்பது பேருக்குமேல் ஆதாயம் செய்தான்.

குஷ்டரோகிகள்

இவர்களுக்குள்ளும் திட்டமான மிஷனெரி வேலை நடத்த முடியுமா என்று அநேகர் நினைப்பார்கள். ஆனால் உயிரோடிருக்கும் சகல மனிதரிலும் இவர்களுக்குத்தான் அதிகமான ஜெபமும் அன்பின் ஊழியமும் அவசியம். கொஞ்சக்காலத்திற்கு முன்னே ஒரு குஷ்டரோக ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு குஷ்டரோகியைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அவன் ஒரு புஸ்தகம் நிறைய குஷ்டரோகிகளின் பேர்களை எழுதி, தினந்தோறும் அவர்களுக்காகத் தேவனைப் பார்த்து ஜெபிக்கிறான். அவனுடைய மலர்ந்தமுகம் அவர்களுடைய இருதயங்களை மகிழ்ச்சியாக்குவதும், ஆத்தும வியாகுலத்தில் மூழ்கியிருந்த அநேகருடைய உள்ளத்தில் அருணோதயப் பிரகாசம் வீசச்செய்வதும் உண்டு.

வர்த்தகசாலை வேலைக்காரர்

ஒரு கடையைச்சேர்ந்த ஒரு வேலைக்காரன் ஜெபத்தோடுகூடிய தன் வேலையின் சித்தியைப்பற்றி நன்றியுள்ள ஒரு கடிதம் எழுதினான். அவன் தன் உடன் வேலையாள் ஒருவனோடு இயேசுவைப்பற்றி வெகு ஊக்கமாய்ப் பேசிவந்தும் அவனோ ஒன்றிற்கும் செவிகொடுக்கவேயில்லை. அவனைத் தன் ஜெப ஜாபிதாவில் எழுதி, ஒழுங்காய் அவனுக்காக ஜெபித்தபின் மறுபடியும் அவனோடு பேசப்போனான். சீக்கிரமாய் அந்த மனிதன் இயேசுவின் சரணத்தை அடைந்தானும்.

வியாதியஸ்தர்

கர்த்தருடைய சிறைகள் என்றழைக்கப்படுவோரில் இவர்கள் ஒரு வகுப்பினர். தங்கள் ஜீவியம் இனிமேல் உபயோகமற்ற பாரம் என்றும், தேவனை மகிமைப்படுத்தும் சமயம் தங்களை விட்டு எடுபட்டுப் போயிற்று என்றும் நினைத்து, வெடுவெடுப்புள்ளவர்களும் இலேசாய்க் கோபப்படுகிறவர்களுமாகிறார்கள். இவர்கள் தேறுதலடையட்டும். ஏனெனில் இவர்கள் 'நம்பிக்கையின் சிறைகள்.' பொறுமையாய்த் தங்கள் பாடுகளைச் சகிப்பதினாலே தேவனை மகிமைப்படுத்

தக் கூடியவர்கள். தங்கள் அறைவீட்டுக்குள் இருந்துகொண்டே ஆத்துமாக்களை ஒவ்வொருவராய் ஆதாயப்படுத்தத் துவங்குவார்களானால் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைப் பரப்புவதில் பலத்த கருவிகளாயுமிருப்பார்கள்.

குணப்படாதவர்களுக்காகப் பரிந்துபேசும் கூட்டமே தற்காலம் அதிக அவசரம். நம்முடைய தேசத்தில் அநேக பிரசங்கிகள், ஊழியக்காரர் உண்டு. ஆனால் ஐயோ! இவர்களில் எத்தனைபேர் 'உன்னதத்திலிருந்துவரும் பெலனால்' தரிப்பிக்கப்படும்வரை காத்திராமல் சுயமாய் யுத்தஞ்செய்யப் போயிருக்கிறார்கள். நம்முடைய தேசத்திற்கு அதிகமான ஜெபம், அதிகமான விசுவாசம், அதிகமான தெய்வீக வல்லமைதான் பிரதான தேவை. பகிரங்கமான ஊழியத்தில் சித்தியடையாத அநேகர், வியாதிப்படுக்கையில் ஆத்துமாக்களுக்காகத் தேவனோடு போராடி சித்திபெற்றிருக்கிறார்கள்.

1856-ம் வருஷம் உண்டான மார்க்க எழுப்புதல் வயதுசென்ற ஒரு நோயாளி அம்மாளின் அறையில் அல்லவா ஆரம்பித்தது. அறைகளில் அடைபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர் இதற்காக ஜெபிப்பார்களாகில், பெந்தெகோஸ்தேயின் வல்லமை மறுபடியும் சபைகளுக்கு வருவதையும், உலகமெங்கும் மார்க்க எழுப்புதல் உண்டாவதையும் காண்போமே.

இந்த ஆலோசனையை வியாதியஸ்தர் ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய சந்தோஷமற்ற ஜீவியத்தில் எவ்வளவோ ஆறுதல் உண்டாகும். குணப்படாதவர்களுக்காக அனுதாபத்தினாலும், அன்பினாலும் நிரப்பப்படும்படி கர்த்தரிடம் காத்திருப்பதினால் எவ்வளவோ சந்தோஷம் பிறக்கும். விசுவாசமுள்ள இந்த ஜெபங்களுக்கு உத்தரவு வரும்போது எவ்வளவோ ஆனந்தமும் உண்டாகுமல்லவா?

ஒரு வியாதிக்கார அம்மாள் சமீபகாலத்திற்கு முன்னே 'நான் சுகவீனமாயிருக்கிறேன். நான் அதிகம் செய்யமுடியாது. ஆனால் நான் ஜெபிக்கக்கூடும்' என்று எழுதினார்கள். ஆம், அப்படி எழுதின அம்மாள் தான் உலகத்தில் செய்யவேண்டிய ஊழியத்தைக் கண்டுகொண்டார்கள்.

'நான் வேறே ஒருவேலையும் செய்யக்கூடாதபோது, கர்த்தருக்காக எழுதுவேன். இதின் மூலமாய் உதவியும் இரட்சிப்பும் வந்ததாக, உள்ளூரிலும் வெளியிடங்களிலுமிருந்து உத்தரவுகள் வருவது நிச்சயம்' என்று இன்னொரு வியாதிக்கார அம்மாள் சொல்லுகிறார்கள்.

இன்னொரு நோயாளி தன்னைப் பார்க்கவரும் சிநேகிதருக்கு எப்படி நன்மை செய்யலாம் என்று யோசித்து, தன் அறையிலேயே

ஒரு ஜெபக்கூட்டம் வைக்கத் துவங்கினார்கள். அதில் ஒரு ஆத்துமா குணப்பட்டது. இன்னொருநாள் ஒரு சிநேகிதி பார்க்கவந்தாள். ஆனால் சிநேகிதி பேசி இவர்களைச் சந்தோஷப்படுத்துகிறதற்குப் பதிலாய், நோயாளியே சிநேகிதியோடு பேச, அவள் அந்நேரமே தன் இருதயத்தை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தாள்.

ஆஸ்பத்திரி வேலையாட்களாகிய நர்சுகள்

அநேக நர்சுகள் பாரமான தங்கள் உத்தரவாதங்களை உணரத் தொடங்குகிறார்கள். அவர்களுடைய வேலையில் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணத்தக்க சமயங்கள் அவர்களுக்கு வாய்க்குமாறு வேறெவருக்கும் வாய்ப்பதில்லை.

ஏழைகளின் ஆஸ்பத்திரி யொன்றிலுள்ள ஒரு நர்ஸ் இவ்விஷயத்தில் அதிசய அனுகூலம் அடைந்தாள். புது வியாதியஸ்தர் வந்தவுடன், அவர்களைத் தன் ஜெப ஜாபிதாவில் பேரெழுதுவாள். அவர்களில் குணப்படுகிறவர்கள் மற்ற ஆத்துமாக்களுக்காக வேலைசெய்யவும் தூண்டுவாள். தங்கள் படுக்கையிலிருந்துகொண்டே யாருக்காக ஜெபிக்கவேண்டுமென்று தேவன் எவுவாரோ அவர்கள் பேரை எழுத ஒரு புஸ்தகமும் கொடுப்பாள். இவ்விதம் வியாதியஸ்தராய் வந்தவர்கள் ஆத்தும ஆரோக்கியமுள்ள மனிதராகவும் கிறிஸ்தவ ஊழியக்காரராகவும் திரும்பிப்போகச் செய்தாள்.

பைத்தியக்காரருக்குள்ளுங் கூட தேவன் ஜெபத்தை அற்புதமாய் உபயோகித்து வருகிறார். பைத்தியக்காரரிடத்தில் ஜெபத்தின் வல்லமை கிரியைசெய்கிறதைக் கண்ணாறக் கண்டாலொழிய ஒருவேளை நம்பமாட்டார்கள். ஆஸ்பத்திரிகளில் ஜெபமும், விசுவாசமும் உள்ள உதவிக்காரர் எவ்வளவு தேவை!

பள்ளிக்கூடத்துப் பெண்கள்

1905-ம் வருஷம் பெப்ரவரி மாதம் ஒரு மாணாக்கியைத் தேவன் சந்தித்து இரட்சித்தார். தன் கூட்டாளிகளை இரட்சிக்கவேண்டிய உத்தரவாதத்தையும் அவளுக்குக் காண்பித்தார். அந்தக்காலத்தில் அவள் சுவிச்சர்லாந்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில், குணப்படாத பதினைந்து மாணாக்கிகளோடு படித்துவந்தாள். அவர்களுக்காக மூன்றுமாதம் இடைவிடாமல் ஜெபிக்கவே அவள் பிராணசிநேகிதி முதலாவதாகக் குணப்பட்டாள். இது நடந்து மூன்று வாரங்களுக்குப்பின், பள்ளிக்கூடத்து இரண்டு தலைவர்களும் அவளும் காலைதோறும் மார்க்க எழுப்புதலுக்காக ஜெபிக்கத்தொடங்கினார்கள். சீக்கிரம் இன்னொரு மாணாக்கி அவளிடம் வந்து, அவளுடைய புதிய சந்தோஷத்தின் இரகசியத்தைக்குறித்து விசாரித்தாள். இதின்மூலமாய் அவள் ஆத்

துமாவைப்பற்றி சம்பாஷித்து, இருவரும் தினந்தோறும் ஒன்றாய் வேதத்தைப் படித்து, ஜெபித்துவர ஒழுங்குசெய்தார்கள். வரவர மற்ற மாணாக்கிகளும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்து, ஒவ்வொருவராய் இயேசுவிடம் வந்தார்கள்.

அயலகத்தார்

ஒரு கிராமத்திலுள்ள ஒரு பக்திமானின் வீட்டு விசாரிப்புக்காரி ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, பரிசுத்தாவியானவர் ஒரு ஆளின்பேரைக் குறிப்பிட்டு 'இந்த ஆளுக்காக ஜெபி' என்றார். அந்த அம்மாள், 'அவன் குடிகாரன், பின்வாங்கிப்போனவன். தன் ஜீவியத்தால் அதிகத் தீமைசெய்தவனுச்சுதே' என்றார்கள். ஆவியானவர் 'ஆயினும் ஜெபி' என்றார். இந்த அம்மாள் நாளுக்குநாள் ஜெபித்துக்கொண்டே வந்தார்கள். ஒருநாள் குடிகாரனின் மனைவி ஓடிவந்து: 'அம்மா, என் புருஷன் தனிமையாயிருக்கும்போது ஆவியானவர் அவனைப் பிடித்தார்; தன் பாவத்தைப்பற்றி அவன் கண்டித்துணர்த்தப்பட்டு, இரட்சகரிடம் திரும்பி, அவருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து இரட்சிக்கப்பட்டான்' என்றாள்.

குடும்பங்கள்

தங்கள் சொந்தப் பிள்ளைகளின் இரட்சிப்பை மறந்தும், இந்த மகா முக்கியமான வேலையை மற்றவர்கள் செய்வார்களென்று விட்டுவிட்டுமிருந்த சில பெற்றோர், இப்போதுதான் தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து முயற்சிக்கத் துவங்கியிருக்கிறார்கள். 'விசுவாசத்தினாலே நோவா தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்.' பூரண ஆசீர்வாதம் பெற்றோருக்கு மாத்திரமல்ல; பிள்ளைகளுக்குந்தான். 'வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது.' என்றாலும் எத்தனையோ பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் இரட்சிப்பைப்பற்றி சிறுவத்தில் கவலையீனமாயிருந்ததால், அவர்கள் பெரியவர்களானபின் அவர்களுடைய அவபக்தியைப் பார்த்துப் பிரலாபித்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசுவானவர் 'இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல;' 'சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள்' என்று சொல்லியிருந்தும் சிறுவரை அசட்டை செய்கிறார்கள்.

சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்படக்கூடும், இரட்சிக்கப்படவேண்டும். கிறிஸ்தவ பெற்றோரும், உபாத்திமாரும் அவர்களை இரட்சிக்கத்தகுந்த சமயம் எதுவெனில்: பாரமான கடமைகளும், நாளுக்கு

நாள் அதிகரிக்கும் ஜீவிய உத்தரவாதங்களும் வருவதற்கு முன்னுன காலந்தான் ; அதாவது நாலு வயதிற்கும் எட்டு வயதிற்கும் மத்தியிலுள்ள காலமே. அவர்கள் பெரியவர்களானபின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் நினைக்கத்தக்கதாக நடத்துவாயாஞல், தாமதம் செய்வதாகிய முதல் பாடத்தை அவர்கள் உன்னிடமிருந்தே கற்றுக்கொள்ளுகிருர்கள். மனச்சாட்சியின் மெல்லிய அமர்ந்த சத்தம் அமர்த்தப்படுகிறது, பரிசுத்தாவி துக்கப்படுகிருர். இயேசுகிறிஸ்து சிறுபிள்ளைகளின் இரட்சகரும் சிநேகிதருமாய் இருக்கிருர். சிறுபிள்ளைகளையும் அவர்களறியத்தக்கதாய் இரட்சிக்கிருர். நீ அவர்களுக்காக ஜெபிக்கிறதை அவர்களுக்குச் சொல்லப் பயப்படாதே. சீக்கிரமாக உனக்கும் உன் இரட்சகருக்கும் இருக்கிற ஐக்கியத்தை அவர்கள் விளங்கிக்கொள்வார்கள். விசேஷமாய், நீ அவர்களைத் தனிமையாய் உன்னோடு வைத்து ஜெபிப்பதால் இதை அவர்களுக்குத் தெளிவாக்கலாம்.

ஒரு தாய் நிர்விசாரியும் சுகஜீவியுமாய் இருந்தாள். அவள் புருஷனுடைய மரணத்தால் தன் ஆத்துமாவின் மோசமான நிலைமையைக்கண்டு, இயேசுரட்சகரை ஏற்றுக்கொண்டாள். தான் குணப்பட்டவுடனே 'ஆண்டவரே, என் குமாரரை இரட்சியும' என்று ஜெபிக்கத்துவங்கினள்.

அவள் மூன்று குமாரரும் உலகத்திற்சென்று வளர்க்கப்பட்டு, உயர்ந்த உத்தியோகம் செய்கிறவர்களாயிருந்தார்கள். ஒருவன் தாயோடே இருந்தான். அவனிடம் இரட்சிப்பைப்பற்றிப் பேச அவன் அதட்டிவிட்டான். பிற்பாடு ஊக்கமாய், நம்பிக்கையோடு அவனுக்காக ஜெபித்துவந்தாள். ஒரு விசேஷித்த கூட்டம் நடந்தது. மகனை அதிகமாய்க் கெஞ்சி, தாங்கி, கூட அழைத்துக்கொண்டு போனுள். அவன் இருதயம் உருகினது. இரட்சகரை ஏற்றுக்கொண்டான். மற்ற இரண்டு குமாரருக்காகவும் ஜெபித்துக்கொண்டே இருந்தாள். இரண்டாம் மகன் கெஸ்விக் கூட்டங்களிலும், மூன்ரும் மகன் வின்செஸ்ற்றர் பட்டணத்திலும் குணப்பட்டார்கள். இப்போது அந்தத் தாயார் 'தேவன் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். அவர் தமது சம்பத்தைச் சேர்க்கும்நாளிலே என் மூன்று குமாரரும் அவருடையவர்களாயிருப்பார்கள்' என்று களிகூறுகிருள். மூன்று பேரும் ஒரே வருஷத்தில் இரட்சிக்கப்பட்டார்கள்.

குடும்ப கொண்டாட்டங்களிலும் நாம் ஆத்துமாக்களைப் பிடிக்க விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். பின்வரும் கதையை ஸ்கொத்லாந்து துரை ஒருவர் சொன்ஞர். 'என் சிநேகிதர் ஒருவர் தமது கலியாணத்தில் என்னை மாப்பிள்ளைத் தோழனுயிருக்கக் கேட்டுக்

கொண்டார். அவரும் அவருக்கு நியமித்திருந்த பெண்ணும் பெண் தோழி குணப்பட ஜெபித்துக்கொண்டே வந்தார்கள். என்னையும் அவளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். அப்படியே நான் கலியாணத்திற்குப் போகும் சமயத்தில் அவளை இயேசுவிடம் நடத்த அவர் என்னை உபயோகிக்க மன்றாடினேன். அவளோடு குணப்படுதலைப் பற்றி நான் பேசச் சமயம் கிடைத்தபோது, தேவன் அவளை ஆயத்தப்படுத்தியிருந்தார் என்று தெரியவந்தது. நான் தங்கின சுருக்கமானகாலத்தில் அநேகமுறை அவளோடு பேசினேன். சீக்கிரத்திற்குள் அவளுக்குள்ளே பெரிய மாறுதல் உண்டானதாக எல்லாரும் கவனித்தார்கள். அவள் என்னிடம் ‘நான் குணப்பட்ட அடுத்த நாளே அவரை அறிக்கை செய்தேன், என் சகோதரி ஒருத்திக்காக என்னோடு ஜெபம் செய்யுங்கள்’ என்றாள். ஒரு மாசத்திற்குப்பின் அந்தச் சகோதரியையும் இயேசுவிடம் கூட்டிக்கொண்டு வந்தாள்.’

இன்னொருவர் தன் குடும்ப அநுபவத்தைப்பற்றி ஒரு நேர்த்தியான சங்கதி சொல்லுகிறார். அவர் குணப்பட்டபோது, அவர் குடும்பத்தார் மெய்க்கிறிஸ்தவர்கள் அல்ல. அவர் குணப்பட்டதும் அவர்களுக்குப் பிரியமில்லை. நீ எங்கள் சந்தோஷங்களுக்கு இடையூறாயிருக்கிறாய் என்று நேரே எத்தனையோதரம் சொல்லுவார்கள்.

இவர் வீட்டுக்குச் சமீபமாய் ஒரு சகோதான் குடியிருந்தார். அவருக்காக அதிகமாய் ஜெபித்தபின் ஒருநாளிரவு அவர் வீட்டிற்குப் போய், வெகு ஊக்கத்தோடு பேசி, ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். அன்று இரவே அந்தச் சகோதரன் குணப்பட்டார். ‘உங்களில் இரண்டுபேர் ஒருமனப்பட்டால்’ என்னும் வாக்குத்தத்தத்தை இவ்விருவரும் நம்பி, இரண்டு வருஷமாய் குடும்பத்திலுள்ள மற்றவர் [illegible]காக ஜெபித்து, அதைப்பற்றி ஒருவருக்கொருவர் கடிதமெழுதி வந்தார்கள். [illegible] இவரால் குணப்பட்ட முதல் சகோதரன் மற்ற சகோதரரைச் சந்தித்துப்பேச, ஒ[illegible]ளில் இன்னும் மூன்று சகோதரர் குணப்பட்டார்கள். அவர் தன் ஊரிலிருந்து வீட்டுக்கு ஒரு தடவை வந்தபோது குணப்பட்ட மூன்று சகோதரரைத் தவிர மற்றவர்கள் முன்னிலும் அதிகக் கடினமாயிருக்கக்கண்டார். அவர் சொல்லுவது ‘என் ரஜாநாட்கள் முடிவுக்கு நெருங்கிக்கொண்டிருந்தது. ஆத்துமாக்களைப்பற்றிய பாரமோ தாங்கக்கூடாததாயிற்று. என் ஆத்துமா தேவனை நோக்கி அலறினது. அதை ஆறுதல் படுத்தக் கூடாமலிருந்தது. என் ரஜாவின் கடைசி நாளில்தான் எனக்குப் புதிய அநுபோகமும் ஆசீர்வாதமும் வந்தது. வழிந்தோடும் சந்தோஷத்தால் நிரப்பப்பட்டேன். ஆகிலும் எனக்குத் துக்கத்தைக் கொடுத்தவர்களிடத்தில் இன்னம் ஒரு மாறுதலையும் நான் காணவில்லை. என்

ரூலும் கர்த்தரை ஸ்தோத்திரித்து வீட்டுக்கு வந்தேன். இதுவரை என்னோடு பேசாமல் விலகிக்கொண்டிருந்த என் ஒரே சகோதரி என்னைத் தன்னோடு சில சிநேகிதிகள் வீட்டுக்கு வரச்சொன்னாள். எனக்குச் சமயம் வாய்த்தது. கர்த்தர் நான் பேசவேண்டியதின்னதென்று காட்டினார். அதை நான் உடனே சொன்னேன். அவள் நான் சொன்னதற்குச் செவிகொடுத்து இரட்சகரை ஏற்றுக்கொண்டாள். அன்று இரவு வீட்டிற்கு வரவும் வீட்டார் அனைவரையும் வேலைக்காரரையும் அழைத்தாள். நான் வேதத்தை வாசித்து ஜெபிக்கக்கேட்டாள், ஏறக்குறைய அன்று இரவு முழுவதையும் ஜெபத்தில் கழித்தோம். தேவன் நிச்சயமாகவே எங்களோடு இருந்தார். கிறிஸ்தவ ஜீவியத்தில் குழந்தைகளாயிருந்த எங்களை உபயோகித்தார். ஒவ்வொருவராய், குணப்படாத என் குடும்பத்தாரும் வேலைக்காரரும் இயேசுவை விசுவாசித்து அறிக்கை செய்தார்கள்.

MISS MARY SLESSOR OF CALABAR

மேரி சிலசாரம்மாள்

இளம்பிராய சரித்திரம்

ஸ்கொத்திலாந்து தேசத்தில் அபர்டீன் பட்டணத்தில் 1848-ம் வருஷம் மேரி மிட்ச்சல் சிலசார் என்ற அம்மாள் பிறந்தார்கள். அவர்கள் தகப்பனுருக்கு செம்மான் வேலை. ஏழு பிள்ளைகளில் [illegible] அம்மாள் இரண்டாவது பிள்ளை. அவர்கள் தாயார் அதி[illegible]தியுள்ள அம்மாள்.

சிறுபிள்ளையாயிருக்கும்போ[illegible] [illegible]னுடைய மூத்த சகோதரன் ஆப்பிரிக்காவின் மேல்[illegible]ரத்திலிருக்கும் கலபாருக்கு மிஷனெரியாகப் போகவே[illegible]டுமென்று சொன்னபோது தானும் கூடப்போக வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் இந்தத் தமையன் சீக்கிரம் இறந்துபோய் விட்டபடியால் மேரி அம்மாளே மூத்தபிள்ளையாகயிருந்தார்கள். தகப்பனர் குடிவெறியினால் வேலையை இழந்ததினால் குடும்பம் முழுவதும் அபர்டீன் பட்டணத்தைவிட்டு டண்டி பட்டணத்திற்கு வந்து குடியேறினார்கள்.

இங்கிருக்கும்போது ஒருநாள் மேரியும் இன்னும் சில பிள்ளைகளும் தெருவில் நின்று விளையாடிக்கொண்டிருக்கும்போது வயது சென்ற விதவையான ஒரு அம்மாள் இப்பிள்ளைகளைத் தன் வீட்டிற்குள் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுடைய ஆத்துமாக்களைப்பற்றி

அவர்களிடம் பேசினார்கள். திடீரென அவர்கள் நெருப்பைச் சுட்டிக்காட்டி, 'அந்த நெருப்பை நீங்கள் பார்க்கிறீர்களே. அதில் கைவைத்தால் கையை வெந்துபோகச்செய்யும். அப்படியே நீங்களும் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் உங்கள் ஆத்துமா நரக அக்கினியில் கிடந்து நித்தியகாலமாய் வேகும்' என்று பயங்கரமாய்ச் சொன்னார்கள். இது மேரியினுடைய மனதில் பலமாய்க் கிரியைசெய்தது. இதின்மூலமாய் மேரி அம்மாள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். நரக அக்கினியின் பயங்கரம் அவர்களைப் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கச்செய்தபோதிலும் அவர்கள் தங்களுடைய ஊழியத்தில் ஒருபோதும் ஆத்துமாக்களை பயங்கரத்தினால் மனந்திரும்பப் பண்ணாமல் அன்பினாலேயே கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்கள்.

குடும்ப கஷ்டம் ஜாஸ்தியானதால் மேரி பதினொரு வயதாயிருக்கையிலே யந்திரசாலையில் போய் வேலை பார்க்க நேரிட்டது. மேரி தான் குடும்பம் முழுவதையும் ஆதரிக்கவேண்டியதாயிற்று. வரவர அவள் தகப்பனார் அதிகமாய் குடிக்க ஆரம்பித்தார். இது மேரிக்கும் அவளுடைய தாயாருக்கும் பெரிய மனக்கவலையை உண்டுபண்ணினது. இவர்கள் இருவருடைய ஊக்கமான ஜெபத்தினாலேதான் குடும்பம் இக்கஷ்டகாலத்தில் ஆதரிக்கப்பட்டுவந்ததென்று சொல்லலாம். இக்காலத்தில் ஓய்வுநாள் ஆராதனைகள்தான் அவர்களுக்கு பெரிய ஆறுதலாயிருந்தது. இக்காலத்துக் கஷ்டங்கள் மேரியினுடைய குணத்தை ஒருவாறு சுத்தப்படுத்தி அவர்களை கஷ்டப்படுகிறவர்கள், வருத்தப்படுகிறவர்கள், சிறுபிள்ளைகள், இப்படிப்பட்டவர்களுக்கு உதவிசெய்யும்படியான குணத்தை ஏவிவிட்டதென்று சொல்லலாம்.

தகப்பனார் மரித்தபோது [illegible]ப்படிப்பட்ட கஷ்டம் நீங்கி, மேரி தான் குடும்பம் முழுவதையும் [illegible]ரிக்கவேண்டியதாயிருந்தது. தனக்கு வெகு அவசரமான காரியங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு [illegible]ற்றதெல்லாவற்றையும் தன்னை வெறுத்து தன் குடும்பத்திற்கே கொடுத்துவந்தார்கள். இக்காலத்தில் இந்த அம்மாள் ஒரு ஓய்வுநாள் வகுப்பும் எடுத்துவந்தார்கள். இன்னும் எளிய தெருக்களில் போய் அங்குள்ள எளிய பையன்களுக்கும் பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுத்து வந்தார்கள். முதலாவது அங்குள்ள முரட்டுப் பையன்கள் அவளை அதிகமாய் எதிர்த்தபோதிலும் மேரி அம்மாளுடைய தைரியமும், அன்பும், அனுதாபமும் எல்லாருடைய மனதையும் கவர்ந்துகொண்டது. யந்திரசாலையிலும் தன்னோடு சேர்ந்த வேலையாட்களில் அநேகரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தினார்கள்.

இப்படி தன்னுடைய நல்ல வாலிப வயதில் ஒவ்வொரு நாளைக்கு 10 மணிநேரம் வீதம் 14 வருஷங்களாக யந்திரசாலையில் உழைத்து வந்தார்கள். இக்காலத்தில் தன்னுடைய மனதையும் விருத்திபண்ணு மலிருக்கவில்லை. கூடிய சமயங்களில், விசேஷமாய் இராத்திரிகளில் உட்கார்ந்து பல புஸ்தகங்களை வாசித்து பத்தியையும் விருத்திபண்ணி வந்தார்கள்.

1874-ம் வருஷம் டாக்டர் லிவிங்ஸ்டனின் மரணம் அநேக ருடைய மனதை எழுப்பி ஆப்பிரிக்காவுக்கு அநேக மிஷனெரி மாரை அனுப்பவேண்டுமென்கிற ஆசையை உண்டாக்கிற்று. இந்த ஆசை மேரி சிலசார் அம்மாளையும் பிடித்தது. அவர்களுடைய சகோதரிகள் இப்போ நல்ல வேலைகளில் அமர்ந்திருந்தார்கள். ஆகையால் தான் முந்தி கொண்டிருந்த எண்ணத்தின்படியே இப் போது இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவுக்கு மிஷனெரியாகப் போகவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். இத்தீர்மா னத்தை தன் தாயாரிடத்தில் சொன்னபோது தாயார் சந்தோஷத்தோடு சம்மதித்தார்கள். ஆகவே 1875-ம் வருஷம் மிஷனெரியாகப் போகும்படி தன்னை ஒப்புக்கொடுத்தார்கள். மேரி அம்மாளுக்கு கலபாருக்குப் போவது அதிக ஆசையாயிருந்தபடியால் கலபாருக்குப் போகும்படியே அவர்களை நியமித்தார்கள்.

ஆகவே மிஷனெரி ஊழியத்திற்காக கொஞ்சக்காலம் டண்டி பட்டணத்திலும், மூன்று மாதம் எடின்பர்க் பட்டணத்திலும் பழக்கு விக்கப்பட்டார்கள். 1876-ம் வருஷம் தன்னுடைய 28-ம் வயதில் மேரி சிலசார் அம்மாள் கலபாருக்குப் புறப்பட்டார்கள். எத்தியோப் பியா என்ற கப்பலில் போய் ஏறும்போது அங்கே ஆப்பிரிக்காவின் மேல்பாகத்திற்காக அநேக பீப்பாய்கள் நிறைய லாகிரி வஸ்துக்கள் ஏற்றப்படுகிறதைக் கண்டு, 'இத்தனை ஏராளமான பீப்பாய்கள் மேல் பாகத்திற்கு ஏற்றப்படுகிறது, ஆனால் மிஷனெரி ஒரே ஒருவர் மாத்தி ரம்' என்று மேரி சிலசார் அம்மாள் சொன்னார்கள்.

CHILDREN'S PAGE

பாலர் பக்கம்

BIBLE PUZZLES—வேத விடுகதைகள்

1. ஆதித் தையற்காரர் யார்?

2. பிறவாத இருவர் எவர்? சாகாத இருவர் எவர்?

3. யார் எலும்பு பட்டபோது உயிருண்டாயிற்று? எலும்புகள் சேர்ந்து உயிருள்ள மனுஷரானதெப்போ?

4. ஒருமுறை மாவும் இருமுறை எண்ணெயும் மும்முறை அப்பங்களும் பெருகின சமயங்களெவை?

5. மிருகமாய் மாறின மனுஷன் யார்? பேசின மிருகம் எது?

6. உருண்டு வந்து, உடைத்துத் தகர்த்து, ஓங்கிவளர்ந்த கல் எது? தலையணையாயிருந்து ஸ்தம்பமான கல் எது?

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆ அக்டோபர்மீ

1	செ.	1 கொரி.	1.	1—17	11	வெ	1 கொரி.	10.	18—33	21	தி.	எஸ்ர.	1.	1—11
2	பு.	„	1.	18—31	12	ச.	„	11.	17—24	22	செ.	„	3.	1—13
3	வி.	„	2	1—16	13	ஞா.	„	12.	1—13	23	பு.	„	4.	1—10
4	வெ.	„	3.	1—11	14	தி.	„	12.	14—31	24	வி.	„	4.	11—24
5	ச.	„	3.	12—23	15	செ.	„	13.	1—13	25	வெ.	„	5.	1—17
6	ஞா.	„	4	1—14	16	பு.	„	15	1—11	26	ச.	„	6	1—12
7	தி.	„	8.	1—13	17	வி.	„	15.	12—28	27	ஞா	„	6.	13—22
8	செ.	„	9.	1—14	18	வெ.	„	15	29—44	28	தி.	„	7.	6—20
9	பு.	„	9.	15—27	19	ச.	„	15.	45—58	29	செ.	„	7.	21—28
10	வி.	„	10.	1—17	20	ஞா.	„	16	1—24	30	பு.	„	8.	21—32
										31	வி.	„	9.	4—15

C. L. S. PRESS, MADRAS—1918